# தொல்காப்பிய மன்றம் - கனடா

தொல்காப்பியவழி தொன்மைத் தமிழர்
வரலாறும் பண்பாடும் அறிவோம்
2020

## தமிழ்த்திறன் போட்டி

## பிரிவு : 5

## 2011இல் பிறந்தோர்

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## முன்னுரை

தமிழின் முதன்மையைப் பறைசாற்றி நிற்கின்றது தொல்காப்பியம். தொன்மை சான்ற நூலை எமக்குத் தந்தருளியவர் தொல்காப்பியர். தொல்காப்பியமே தமிழரின் மொழியின் ஆளுமையையும், ஆளுகையையும் வெளிப்படுத்தும் தொன்மத்தின் கூறாக அமைந்துள்ளது. தொன்மை சான்ற இலக்கிய மரபினை உலகிற்கு எடுத்துக்காட்டி தமிழின் பெருமையையும் அதன் வழி தமிழரின் பாரம்பரியத்தையம், பண்பாட்டையும் எடுத்தியம்பும் பழம்பெரும் பொக்கிசமாக எமக்குக் கிடைத்துள்ளது. தொல்காப்பியம் காலப் பழமையும் கருத்தின் ஆழமும் கொண்ட மிகச்சிறந்த கலைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது. “கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள்” தமிழனது அறநெறியைப் புகட்டுவது போன்று தொல்காப்பியமும் அரும்பெரும் மொழிப் பெட்டகமாகத் திகழ்வது கண்கூடு. சொற்செறிவு, பொருட்செறிவு பொதிந்த தொல்காப்பிய பனுவலை பனம்பாரணர், நச்சினார்க்கினியர், இளம்பூரணர், கல்லாடனார், சேனாவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் போன்றோர் நன்கு கற்றுணர்ந்து உரை தந்துள்ளனர். அத்தோடு தொல்காப்பியத்தின் தொன்மை பற்றி மறைமலையடிகள், வெள்ளைவாரணனார், சோமசுந்தர பாரதியார், வையாபுரிப்பிள்ளை, சீனிவாசக ஐயங்கார், நீலகண்ட சாஸ்திரிகள் போன்றோர் ஆய்ந்து எழுதியுள்ளமை அதன் சிறப்பை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

தோண்டத்தோண்ட ஊறிவரும் மனற்கேணி போன்று கற்கக் கற்க குறை வில்லாத் தெளிவைத் தந்து வியப்பில் ஆழ்த்துகின்றது தொல்காப்பியம். தமிழின் தொன்மைச்சான்று நூலான தொல்காப்பியத்தின் காலம் ஆய்வுகளின் காரணமாக அதன் ஆழ அகலத்தை மென்மேலும் ஆழங்காண வேண்டும் என்னும் உந்துதலை ஏற்படுத்தியுள்ளது. உலகிற் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களில் திராவிட நாகரிகம் ஒன்று என்பதனை எடுத்துக்காட்டுவதற்கு மட்டுமன்றி தமிழைச் செம்மொழியாக்குவதற்கான அடிப்படை இலக்கண நூலாகவும் இது விளங்குகின்றது.

“ஓர் இனத்தை வீழ்த்த வேண்டுமானால் அவர்தம் மொழியை வீழ்த்த வேண்டும்” என்னும் எண்ணப்பாங்கிற்கேற்ப, உலக வரலாற்றில் பல்வேறு எழுச்சியுற்ற காலங்களில் சில இனங்களைச் சிதைத்தும் அழித்தும் வந்துள்ளன. உலகில் தோன்றிய மொழிகளில் பெருந் தொகையானவை அழிந்து போயுள்ளன. இதற்கு வேற்று இனங்களின் தாக்கம், ஆக்கிரமிப்பு, எழுச்சி என்பன காரணிகளாக அமைந்துள்ளன. ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு ஒன்று மொழி, மற்றது மதம் என்பவை முக்கிய கருவிகளாக உலக வரலாற்றில் அமைந்துள்ளன.

அதற்கு எமது தமிழினமும் விதிவிலக்கல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, இயற்கையின் சீற்றம் போன்றன வரலாற்றுக் காலந்தொட்டே இடம் பெற்று வந்துள்ளன.

இன்று நாம் தமிழர் என்று கூறிக்கொண்டு தமிழ் தெரியாமல் வாழும் நிலை ஏற்பட்டுவருகின்றது. புலம்பெயர்ந்த மண்ணில் மட்டுமன்றி தாயகத்திலும் இன்று தமிழில் பேச வெட்கப்படும் நிலைமையினைக் காண்கின்றோம். வேற்று மொழி-களைப் பேசுவது பெருமை என நினைக்கின்றோம். தமிழ் உணர்வே இன்றி வாழ்ந்து வருகின்றோம். தமிழை வெறும் வயிற்றை நிரப்புவதற்காக மட்டும் பயன்படுத்தும் நிலைமாறி, இது எங்கள் தாய்மொழி, எமது உணர்வோடு ஒட்டிய மொழி என்னும் உண்மை உணர்வோடு செயற்பட எம்மை ஊக்குவிப்பதற்கான தொன்மை சார்ந்த நூல் ஒன்று உளது என்றால் அது தொல்காப்பியம் தான் என்று துணிந்து கூறமுடியும்.

கனடாவில் வாழும் தமிழ் மொழி கற்கும் மாணாக்கர் இலகுவாகத் தொல்காப்பியம் கூறும் செய்திகளையும் அதனோடு ஒத்த தமிழின செழுந்தன்மையையும், வரலாற்றையும் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு அறிமுகப் படுத்தப்படுவதே மாணவர்களுக்கான இந்தத் தேர்வு வினாக்கொத்து. பெற்றோர் இலகுவாகத் தம்பிள்ளைகளுக்கு எமது பண்பாடு, விழுமியம், மொழி பற்றிய அறிவினை வாழைப்பழத்தில் ஊசி செலுத்துவது போன்று அவர்கள் உள்ளத்தில் ஏற்றிவிட உதவுவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே இவற்றை அக்கறையோடு பிள்ளைகள் கற்றுக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தொல்காப்பிய மன்றம் - கனடா**

---

## கனடா தொல்காப்பிய மன்றத்தின் செயலவை உறுப்பினர்

1. திரு. சபா. அருள்சுப்பிரமணியம் (தலைவர்)
2. திரு. வ.சுகந்தன் (செயலாளர்)
3. திரு. பா.யாழ்கோவன் (பொருளாளர்)
4. திருமதி. லீலா சிவானந்தன் (துணைத் தலைவர்)
5. திரு. சி.சண்முகராஜா (துணைச் செயலாளர்)
6. திரு. த.சிவபாலு
7. திரு. க.குமரகுரு
8. செல்வி. பொ.குமுதினி
9. திருமதி. வாசுகி நகுலராஜா
10. திரு. கனக மனோகரன்
11. திரு. ச.இராஜேஸ்வரன்

# தொல்காப்பிய மன்றப் பாடல்

# வாழியவே!

ஒல்காப் புகழ்கொண்ட புலவரவர் - தமிழ்
உலகம் போற்றிடும் அறிஞரவர்
தொல்காப் பியன்புகழ் பாடிவரும் - கனடா
தொல்காப் பியமன்றம் வாழியவே!

கனடா மண்ணில் கிளையமைத்தோம் - தமிழ்
கற்றவர் ஏற்றிடப் பணிபுரிவோம்!
மனதாய்த் தமிழர் வாழ்வியலை — தமிழ்
மாணவர் கற்றிட வழிசமைப்போம்!!

கற்றதை மற்றவர் அறிந்திடவே — எங்கள்
கனடாக் கிளைவழி செய்துதரும்
பற்றுடன் நாம்செய்யும் தொண்டுகளால் - இந்தப்
பாரினிற் தமிழ்மொழி வீறுபெறும்!

பண்டைத் தமிழரின் வாழ்வுதனை — நன்கு
படம்பிடித் தழகாய்த் தந்தவரே!
மண்டலம் உன்பணி போற்றுதையா! - இந்த
மாநிலத் தமிழினம் வாழ்த்துதையா!!

எழுத்து சொல்பொருள் எனவகுத்து — தமிழ்
இலக்கணம் செய்து தந்தவனாம்
பழுத்த முதுபெருஞ் சான்றோனாம் — தொல்
காப்பிய னார்புகழ் வாழியவே!

ஒன்பது இயல்களிற் தமிழரது — வாழ்வின்
உண்மைகள் யாவையும் பொதியவைத்து
மன்பதை போற்றிடும் நூலாக — ஆக்கி
வழங்கிய ஆசான் வாழியவே!

சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

## கையேடு - 5

### தமிழ்த்திறன் போட்டியின் நோக்கம்:

கனடா தொல்காப்பிய மன்றத்தினால் நடத்தப்படும் இந்த மொழித்திறன் போட்டி மாணவர்களின் மொழி ஆற்றலையும், சொற்களஞ்சியத்தையும் பெருக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது. வேற்று இனமக்கள் மத்தியிலே வேற்று மொழியிற் கல்வி பயிலும் எமது தமிழ்ச் சிறார் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கு இப்போட்டியிற் பெறும் அறிவு உதவும் என்று நம்புகிறோம்.

சிறுவர் தமது சூழலில் உள்ள பொருட்களின் தமிழ்ப் பெயர்களை அறியவும், சொல்லவும் இப்போட்டி உதவுமெனவும் எண்ணுகிறோம்.

சரியான முறையில் பெற்றோரதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்புக் கிட்டும்போது எமது முயற்சி கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் வெற்றிகரமாக நடை-பெறுமென்று எதிர்பார்க்கிறோம்.

## 2020 பிரிவு 5 தமிழ்த்திறன் போட்டிக்கான விதிமுறைகள்:

2011இல் பிறந்தவர்கள் இப்போட்டியிற் பங்கேற்கலாம். இவர்களுக்கான போட்டி 3 நிலைகளில் நடைபெறும்.

1. பேச்சுப்போட்டி 2. பொது அறிவுப்போட்டி 3. வினாக்களுக்கு விடைதெரிதல்

**1. பேச்சுப் போட்டி - "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்?"**

பேச்சுப் போட்டிக்குரிய பேச்சு கையேட்டில் உள்ளது.

சிறுவர் கொடுக்கப்பட்டுள்ள பகுதியை மனனம் செய்து நடுவர்கள் முன்னிலையில் பேசவேண்டும்.

**2. படங்களுக்கான சொற்களைக் கூறுதல்:**

- இப்பிரிவினருக்கு 160 படங்கள் பெயர்களுடன் கொடுக்கப்படும். அவற்றிற் குறிப்பிட்ட சொற்கள் மட்டும் கேட்கப்படும்.
- சொற்களைத் தெரிவுசெய்யும்போது குலுக்கல் முறையில் சொற்கள் தெரிவு செய்யப்படும்.
- போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்கள் கேட்கப்படும். முடிவு காண்பதில் சிக்கல் ஏற்படும் போது மேலதிக சொற்களின் புள்ளிகள் (bonus) கணக்கில் எடுக்கப்படும்
- படங்களுக்கான சொற்களைக் கூறுதல். மாணவர் பட்டறிவிற்கு உட்பட்டதாக மேலதிக வினாக்களும் கேட்கப்படும்.
- போட்டி நடைபெறும் நாள், இடம், நேரம் என்பன விண்ணப்பதாரிகளுக்குத் தனித்தனியே அறியத்தரப்படும். இணையத்தளம் ஊடாகவும் பார்க்கலாம்.

**3. கேட்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து வட்டமிடுதல்.**

* பல்தேர்வு வினாவிடைகள் ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியே வழங்கப்படும். போட்டியாளர் கொடுக்கப்படும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு-செய்யவேண்டும். மேலதிக வினாக்களும் கொடுக்கப்படும். போட்டி முடிவைக் காண்பதில் சிக்கல் ஏற்பட்டால் மேலதிக வினாக்களின் புள்ளிகள் கணக்கில் எடுக்கப்படும்.

பிரிவு: 5 அகவைப் பிரிவு: 9

# அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

வணக்கம்.

உலகில் இன்று மனிதன் தனது சிந்தனைத் திறத்தாலும் சீரிய செயற்பாடுகளினாலும் இயற்கையை வெற்றிகொண்டு தன்னை மேன்மைப் படுத்தியுள்ளான். இவற்றிற்கெல்லாம் அடிநாதமாக விளங்கியது மனித நேயம் அல்லவா? இந்த மனித நேயத்திற்கு ஆதாரமாக விளங்குவது என்ன? அன்பு, பற்று, பாசம் என்கின்ற மனித உணர்வுகளே.

கூடிவாழும் இயல்புகொண்ட மனிதனை ஏனைய விலங்குகளிடம் இருந்து விலக்கிவைத்து நோக்கவைப்பது அவனது பகுத்தறியும் தன்மையே. பகுத்தறிந்து பல்லுயிரை ஓம்பிப் பாரில் மனிதன் தனித்துவம் பெறுவதற்கு மூலாதாரமாக விளங்குவது அன்பில்லையா?

அதனாற்தான் நம்முன்னோர் அன்புதான் சிவம் என்று அன்பையே கடவுளாகக் கண்டனர். ஆண்டாண்டு காலமாக இந்த அன்பின் வலிமை உணரப்பட்டே வந்துள்ளது. எந்தச் சமயத்தை எடுத்து நோக்கினாலும் அங்கே அன்புதான் ஆணிவேராக இருந்து இயக்குவதை நாம் அறியலாம்.

சைவம், வைணவம், புத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் எல்லாமே அன்பைத் தான் தமது மதங்களின் ஆணிவேராகக் கொண்டுள்ளன. 'அன்புதான் இன்ப ஊற்று', 'அன்புதான் உலக மகாசக்தி' என்று புத்தபிரானைக் கூற வைத்ததும் இதுவே.

சமயப்பெரியார்கள் மட்டுமா அன்புநெறி பற்றிப்பேசினர்? எம்மாற் போற்பட்ட ஞானிகள், மேதைகள், தீர்க்கதரிசிகள், ஏன் அரசியல்வாதிகள் கூட அன்பிற்கு முன்னுரிமை கொடுத்துப் பேசியுள்ளதை நாமறிவோம்.

அந்தவரிசையில் வாழ்க்கை நெறியை நமக்கு வகுத்துத் தந்த வள்ளுவப் பெருந்தகைகூட அன்பின் வலிமையை அன்புடைமை என்னும் 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்' என்ற வினாவை எழுப்பி அன்பின் வலிமையை நாமெல்லாம் உணர வைத்துள்ளார்.

நன்றி.

வணக்கம்.

# உணவு



இட்டலி



தோசை



பாயாசம்



கழி



உப்புமா



கூழ்






சோறு










வடை

# உடல் உறுப்புகள்

| | |
|---|---|
| <br>வயிறு | <br>நெஞ்சு |
| <br>முதுகு | <br>தோள்மூட்டு |
| <br>கழுத்து | <br>சின்னவிரல் |
| <br>முழங்கால் | <br>இடுப்பு |

# நிறங்கள்

| | |
|---|---|
|  பச்சை |  சிவப்பு |
|  மஞ்சள் |  நீலம் |
|  கருப்பு - கறுப்பு |  வெள்ளை |
|  ஊதா |  செம் மஞ்சள் |

# எண்கள்

| | |
|---|---|
| 11<br>பதினொன்று | 12<br>பன்னிரண்டு |
| 13<br>பதின்மூன்று | 14<br>பதின்னான்கு |
| 15<br>பதினைந்து | 17<br>பதினேழு |
| 19<br>பத்தொன்பது | 90<br>தொண்ணூறு |

# உதவுமிடங்கள்





தபாலகம்




மருந்தகம்



அச்சகம்



பணியகம்



தொழிலகம்



விலங்ககம்



அருங்காட்சியகம்



உணவகம்

# பறவைகள்



வாத்து



கிளி



மயில்



பருந்து



புறா



செண்பகம்





கழுகு



மைனா

# மிருகம்

| | |
|---|---|
| <br>மாடு | <br>ஆடு |
| <br>குதிரை | <br>கழுதை |
| <br>பூனை | <br>எலி |
| <br>எருமை | <br>நாய் |

# உந்துவகை

| | |
|---|---|
| <br>சிற்றுந்து | <br>பேருந்து |
| <br>மிதியுந்து | <br>தொடருந்து |
| <br>விண்ணுந்து | <br>நீர்மூழ்கி |
| <br>பாரவூர்தி | <br>முச்சக்கரவண்டி |

# காய்கறிகள்



கரட்



வாழைக்காய்



முள்ளங்கி



பூசணிக்காய்



வெண்டிக்காய்



பயற்றங்காய்




தக்காளிக்காய்



சுரைக்காய்

# கிழங்கு வகை



உருளைக்கிழங்கு




மரவள்ளிக்கிழங்கு



இராசவள்ளிக்கிழங்கு



இஞ்சி



வற்றாளங்கிழங்கு



கரணைக்கிழங்கு



பனங்கிழங்கு



பீற்றூட்


# வீட்டுப் பொருட்கள்

| | |
|---|---|
| <br>கட்டில் | <br>மேசை |
| <br>பானை | <br>நாற்காலி |
| <br>அலுமாரி | <br>செம்பு |
| <br>கிண்ணம் | <br>அகப்பை |

# பாவனைப் பொருட்கள்

| | |
|---|---|
|  கத்தி |  கோடரி |
|  மண்வெட்டி |  சவள் |
|  வாள் |  சுத்தியல் |
|  குறடு |  முள்ளு |

# ஊர்வன

| | |
|---|---|
|  பாம்பு |  புலிமயிர்ச்சிலந்தி |
|  எறும்பு |  ஓணான் |
|  பல்லி |  பச்சோந்தி |
|  அரணை |  கறையான் |

# நீர் வாழ்வன



விலாங்கு



நண்டு



தவளை



இறால்




பென்குயின்



முதலை



கணவாய்



திமிங்கிலம்

# இலத்திரனியல்



வானொலிப்பெட்டி




தொலைக்காட்சிப்பெட்டி



கணினி



மடிக்கணினி



மின்னடுப்பு



குளிர்சாதனப்பெட்டி



தொலைபேசி



கைத்தொலைபேசி

# பழங்கள்



மாம்பழம்



தோடம்பழம்



எலுமிச்சம்பழம்



அப்பிள்பழம்



வாழைப்பழம்



மாதுளம்பழம்



திராட்சைப்பழம்



விளாம்பழம்

# மரங்கள்


பனை


தென்னை


முருங்கை


கமுகு


வாழைமரம்


வேம்பு


தேக்கு


மேப்பிள்

# ஆபரணம்



சங்கிலி



காப்பு



தோடு



ஒட்டியாணம்



காற்சங்கிலி



அட்டியல்



மோதிரம்



தாலி

# மங்கலப் பொருட்கள்



கும்பம்



தேங்காய்



மாவிலை



குத்துவிளக்கு



பன்னீர்ச்செம்பு



சந்தனம்



வாழையிலை



குங்குமம்

# பூக்கள்



மல்லிகைப்பூ



அரளிப்பூ



கனகாம்பரப்பூ



செவ்வரத்தம்பூ



தாமரைப்பூ



அல்லிப்பூ



றோசாப்பூ



மாதுளம்பூ

# தொல்காப்பிய மன்றம் - கனடா

## பிரிவு 5 வினா - விடைகள்

1. **தமிழ் எழுத்துக்களின் வகைகள் எத்தனை?**
நான்கு. (உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து)

2. **தமிழில் உயிர் எழுத்துக்கள் எத்தனை?** பன்னிரண்டு

3. **தமிழில் உயிர் குற்றெழுத்துக்கள் எத்தனை?**
ஐந்து. (அ, இ, உ, எ, ஒ)

4. **தமிழில் உயிர் நெட்டெழுத்துக்கள் எத்தனை?**
ஏழு (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ)

5. **தமிழில் மெய் எழுத்துக்கள் எத்தனை?**
பதினெட்டு (க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்)

6. **தமிழ் மொழியில் எத்தனை உயிர்மெய் எழுத்துக்கள் உள்ளன?** இருநூற்றிப்பதினாறு

7. **வல்லின மெய்யெழுத்துக்கள் எவை?** க், ச், ட், த், ப், ற்

8. **மெல்லின மெய்யெழுத்துக்கள் எவை?** ங், ஞ், ண், ந், ம், ன்

9. **இடையின மெய்யெழுத்துக்கள் எவை?** ய், ர், ல், வ், ழ், ள்

10. **தமிழில் முதல் எழுத்துகளின் எண்ணிக்கை என்ன?**
முப்பது

11. **வினா எழுத்துகள் எவை?** எ, யா, ஆ, ஓ, ஏ

12. **மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது?** ஏ

13. **சுட்டு எழுத்துகள் எவை?** அ, இ, உ

14. **தமிழ் இலக்கணம் கூறும் மூன்று காலங்களும் எவை?**
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்

15. **எதிர்கால இடைநிலைகள் எவை?** ப், வ்

16. **இறந்தகால இடைநிலைகள் எவை?** த், ட், ற், இன், ன்

17. **நிகழ்கால இடைநிலைகள் எவை?** ஆநின்று, கின்று, கிறு

18. **இறந்தகாலத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?** கடந்தகாலம்

19. **இயல், இசை, நாடகம் என்பவற்றை எவ்வாறு அழைப்பார்கள்?** முத்தமிழ்

20. **பண்டைய தமிழ் இலக்கண நூல் எது?** தொல்காப்பியம்

21. **தொல்காப்பியத்திலுள்ள மூன்று அதிகாரங்களும் எவை?** எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

22. **தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலை எழுதியவர் யார்?** தொல்காப்பியர்

23. **பொய்யா மொழி அல்லது முப்பால் என அழைக்கப்படும் நூல் எது?** திருக்குறள்

24. **திருக்குறளின் முப்பெரும் பிரிவுகள் எவை?** அறம், பொருள், இன்பம்

25. **முல்லைக்குத் தேர் ஈந்த மன்னன் யார்?** பாரி

26. **ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த மன்னன் யார்?** அதியமான்

27. **கண்ணகி கதையைப் பாடும் பெருங்காப்பியத்தின் பெயர் யாது?** சிலப்பதிகாரம்

28. **சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?** இளங்கோவடிகள்

29. **யாழ் நூலை எழுதியவர் யார்?** சுவாமி விபுலாநந்தர்

30. **ஆறுமுகநாவலர் எழுதிய பாடநூல்கள் கூறுக:** பாலபாடம், பாலபோதினி

31. **"வாழ்க நிரந்தரம் வாழிய தமிழ் மொழி" எனத்தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?** சுப்பிரமணிய பாரதியார்

32. **"ஓடி விளையாடு பாப்பா" எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?** சுப்பிரமணிய பாரதியார்

33. **மகாகவி என அழைக்கப்படும் ஈழத்துக் கவிஞர் யார்?**
மகாகவி உருத்திரமூர்த்தி

34. **மூவேந்தர் என அழைக்கப்படுவோர் யாவர்?**
சேரர், சோழர், பாண்டியர்

35. **வன்னியை ஆண்ட இறுதி மன்னன் யார்?**
பண்டாரவன்னியன்

36. **யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னன் யார்?**
சங்கிலியன்

37. **இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆண்ட தமிழ் மன்னன் யார்?** எல்லாளன்

38. **கண்டியை ஆண்ட இறுதி மன்னனின் பெயர் என்ன?**
சிறி விக்ரமராஜசிங்கன் என்னும் கண்ணுச்சாமி

39. **தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?** மறைமலை அடிகளார்

40. **ஐம்பொறிகள் எவை?** மெய், வாய், கண், மூக்கு, செவி

41. **ஐம்பெரும் பூதங்கள் எனப்படுபவை எவை?**
நிலம், நீர், தீ, காற்று, வானம்

42. **அன்பு என்பதற்கு ஒத்த சொல் ஒன்று தருக:**
நேசம், பாசம், விருப்பம்

43. **மஞ்ஞை என்ற சொல் குறிக்கும் பறவை எது?** மயில்

44. **ஞமலி என்னும் சொல் குறிக்கும் விலங்கு எது?** நாய்

45. **கிளவி என்பதற்கான ஒத்த சொல் ஒன்று தருக:**
மொழி, சொல், பதம்

46. **அரசன் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
மன்னன், கோன், வேந்தன்

47. **களிறு என்பதற்கான ஒத்த சொல் தருக:**
யானை, கரி, மதம், வேழம்

48. **'ஆ' எனப்படும் வீட்டு விலங்கு எது?** பசு, கோ

49. **மாதம் என்பதன் ஒத்த சொல் எது?** திங்கள்

50. **சந்திரன் என்பதன் ஒத்த சொல் ஒன்று தருக:**
நிலா, அம்புலி, திங்கள்

51. **தாய் என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
அம்மா, ஐயை, மாதா, அன்னை

52. **தந்தை என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
அப்பா, ஐயன், பிதா

53. **வழி என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
பாதை, மார்க்கம்

54. **வளி என்பதற்குரிய ஒத்த சொல் ஒன்று தருக:**
காற்று, வாயு

55. **மாதம், சந்திரன் என்னும் இரு சொற்களைக் குறிக்கும் ஒரு சொல் எது?** திங்கள்

56. **கணவன் என்பதன் பெண்பால் சொல் என்ன?** மனைவி

57. **உழவன் என்பதன் பெண்பால் சொல் யாது?** உழத்தி

58. **தோழி என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** தோழன்

59. **ஆசிரியை என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** ஆசிரியன்

60. **தலைவன் என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** தலைவி

61. **சேவல் என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** பேடு

62. **மறி என்பதன் எதிர்ப்பால் சொல் யாது?** கடா

63. **மேடு என்பதன் எதிர்ச் சொல் யாது?** பள்ளம்

64. **விருப்பு என்பதற்கான எதிர்ச் சொல் எது?** வெறுப்பு

65. **ஒற்றுமை என்பதன் எதிர்ச் சொல் யாது?** வேற்றுமை

66. **தண்ணீர் என்பதன் எதிர்ச் சொல் யாது?** வெந்நீர்

67. **குளிர் என்பதன் எதிர்ச் சொல் யாது?** சூடு

68. **ஆக்கம் என்பதன் எதிர்ச் சொல் யாது?** அழிவு

69. **காகம் எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** கரைதல்

70. **நாய் எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** குரைத்தல்

71. **புலி எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** உறுமுதல்

72. **பசு எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** கதறுதல்

73. **குதிரை எழுப்பும் ஒலி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?** கனைத்தல்

74. **Allergy என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?** ஒவ்வாமை

75. **Diabetes என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?** நீரிழிவு

76. **Mother Tongue என்பதைத் தமிழில் எவ்வாறு வழங்குவர்?** தாய்மொழி

77. **Instructional Language என்பதைத் தமிழில் எவ்வாறு வழங்குவர்?** கற்கைமொழி

78. **Bank என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?** வைப்பகம், வங்கி

79. **Website என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?** இணையம், இணையத்தளம்

80. **Font என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?** எழுத்துரு

81. **Browser என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?** உலாவி

82. **Grammar என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?** இலக்கணம்

83. **Jack Fruit என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?**
பலாப்பழம்

84. **Lotus என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?** தாமரை

85. **Wood-Apple என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?**
விளாம்பழம்

86. **Season என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?**
பருவகாலம்

87. **Summer என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?**
கோடைகாலம், வெயிற்காலம்

88. **காய்ச்சல் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Fever

89. **புற்றுநோய் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Cancer

90. **கோள்கள் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Planet

91. **கறுவா என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Cinnamon

92. **நெல் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Paddy

93. **இறால் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Prawn

94. **பாதாம் பருப்பு என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?**
Almond

95. **வெள்ளைப்பூண்டு என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?**
Garlic

96. **இஞ்சி என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Ginger

97. **கோதுமை என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Wheet

98. **வெண்ணைக்கட்டி என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?**
Butter

99. **கடலாமை என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Turtle

100. **தேள் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Scorpion

101. **இலையுதிர் காலம் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Falls, Autumn

102. **குளிர் காலம் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Winter

103. **மாகாணம் என்பதற்கான ஆங்கிலப் பதம் என்ன?** Province

104. **பாம்பை ஆடவைக்கப் பயன்படுத்தப்படும் இசைக்கருவி எது?** மகுடி

105. **"பாலைவனக் கப்பல்" என்று அழைக்கப்படும் விலங்கு எது?** ஒட்டகம்

106. **காகத்தின் கூட்டில் முட்டையிடும் பறவை எது?** குயில்

107. **மங்கல வாத்திய வகையைச் சேர்ந்த இசைக்கருவிகள் எவை?** தவில், நாதசுரம்

108. **சூரியகிரகணம் என்றால் என்ன?** சூரியனிற்கும் பூமிக்கும் இடையில் நிலவு வரும் போது, சூரியன் பகுதியாகவோ முழுமையாகவோ மறைக்கப்படுதல்

109. **தாய்லாந்து நாட்டில் திருமணத்தின்போது பாடப்படும் தமிழ்ப்பாடல் எது?** திருவாசகம்

110. **தனது நாணயத்தில் தமிழ் இலக்கங்களைக் கொண்டுள்ள நாடு எது?** மொறிசியஸ்

111. **தமிழ் மொழி பேசப்படும் நாடுகள் எவை?** இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா

112. **உலகில் மொத்தம் எத்தனை மொழிகள் பேசப்படுகின்றன?** 2796 மொழிகள்

113. **கனடாவில் வாழும் தமிழர் தொகை அண்ணளவாக என்ன?** 300,000

114. **இந்தியாவில் வாழும் தமிழர் தொகை அண்ணளவாக என்ன?** 8 கோடி

115. **உலகில் வாழும் தமிழர் தொகை அண்ணளவாக என்ன?** 9 கோடி

116. **உயர் திணையின் பாற்பகுப்புக்கள் எவை?**
ஆண்பால், பெண்பால், பலர்பால்

117. **அஃறிணையில் உள்ள பாற்பகுப்பு எவை?**
ஒன்றன்பால், பலவின்பால்

118. **காரணப்பெயருக்கு ஒரு எடுத்துக்காட்டுத் தருக:**
பறவை, கால்நடை

119. **இடுகுறிப் பெயருக்கு ஒரு எடுத்துக்காட்டு தருக:** மரம்

120. **மலையையும் மலை சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?** குறிஞ்சி

121. **கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?**
நெய்தல்

122. **வயலும் வயல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?**
மருதம்

123. **காடும் காடு சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?**
முல்லை

124. **இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை எவ்வாறு அழைப்பர்?**
வெள்ளிவிழா

125. **ஐம்பதாவது ஆண்டு விழாவை எவ்விதம் அழைப்பார்கள்?**
பொன்விழா

126. **அறுபதாவது ஆண்டு விழாவை எவ்விதம் அழைப்பார்கள்?**
வைரவிழா

127. **நூறாவது ஆண்டு விழாவை எவ்விதம் அழைப்பார்கள்?**
சதமவிழா, நூற்றாண்டு விழா

128. **பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்த இலங்கையார் யார்?** ஆழிக்குமரன் ஆனந்தன்

129. **ஏட்டுச் சுவடிகளைத் தேடிப்பெற்று நூலுருவாக்கிய ஈழத்தவர் யார்?** சி. வை. தாமோதரம்பிள்ளை

130. **தமிழ்த் தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?**
உ. வே. சாமிநாத அய்யர்

131. **தமிழர் விளையாட்டுக்களில் ஒன்றைத் தருக:**
கிளித்தட்டு, சடுகுடு, கிட்டிப்புள்ளு, பல்லாங்குளி

132. **தமிழர் தற்காப்புக்கலைகளில் ஒன்றைத் தருக:**
சிலம்பம், மல்லாட்டம்

133. **தமிழரின் வீரவிளையாட்டுக்களில் ஒன்றைத் தருக:**
சல்லிக்கட்டு (ஏறு தழுவுதல்)

134. **ஈழத்தமிழர் வரலாற்றில் "கறுப்பு ஜூலை" எனப்படும் நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டு எது?** 1983

135. **யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு எது?**
1981

136. **முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எந்த மாதத்தில் நினைவு கூறப்படுகின்றது?** மே மாதத்தில்

137. **கனடா நாட்டின் எல்லைகள் எவை?** ஆர்க்ரிக் சமுத்திரம், அற்லான்ரிக் சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நான்குமாகும்.

138. **கனடாவின் தலைநகரமான ஒட்டாவா எந்த மாநிலத்தில் உள்ளது?** ஒன்ராறியோ

139. **கனடாவில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?**
பத்து மாகாணங்கள்

140. **தை மாதத்தில் கொண்டாடப்படும் தமிழர் திருநாள் எது?**
தைப்பொங்கல்

141. **கனடாவில் மரபுத்திங்கள் எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது?** தை மாதத்தில்

142. **தமிழ் மரபுத் திங்களை கனடா அரசு உத்தியோக பூர்வமாக எந்த ஆண்டில் ஏற்றுக்கொண்டது?** 2016இல்

143. **இந்தியாவின் தலைநகரம் எது?** நியூடெல்கி

144. **இலங்கை அரசாங்கக் கொடியின் சின்னம் எது?** சிங்கம்

145. **இலங்கைக்கு வந்த முதலாவது ஐரோப்பியர் யார்?**
போர்த்துக்கேயர்

146. **போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு எது?**
1505 ஆம் ஆண்டு

147. **போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் காணப்பட்ட அரசுகள் எவை?**
கண்டி, வன்னி, யாழ்ப்பாணம், கோட்டை

148. **“சப்பாத்து” என்று தமிழில் உபயோகிக்கப்படும் சொல் எந்த நாட்டு மொழியைச் சார்ந்தது?** போர்த்துக்கல்

149. **யாழ்ப்பாணத்தில் போத்துக்கேயரால் கட்டப்பட்ட கோட்டை எப்போது அழிக்கப்பட்டது?** 1998 இல்

150. **இலங்கையை ஆங்கிலேயர் எவ்வாறு அழைத்தனர்?**
சிலோன்

151. **“இந்து சமுத்திரத்தின் முத்து” எனப்படும் நாடு எது?**
இலங்கை

152. **இலங்கையில் பௌத்தமதத்தைக் கொண்டுவந்தது யார்?**
அசோக மன்னனின் மகன் மகிந்தன்

153. **இலங்கையில் பௌத்தமதம் பரப்பப்பட்டபோது இந்தியாவை ஆண்ட பேரரசன் யார்?** அசோகன்

154. **இலங்கையில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?**
ஒன்பது மாகாணங்கள்

155. **இலங்கையில் மிக நீண்ட ஆறு எது?** மகாவலி கங்கை

156. **இலங்கையின் மிக உயர்ந்த மலை எது?**
பிதுருதாலகால மலை

157. **இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யார்?**
கோட்டாபாயா ராஜபக்ச

158. **இலங்கையின் தற்போதைய பிரதமர் யார்?**
மகிந்த ராஜபக்ச

159. **உலகின் முதல் பெண் பிரதமர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**
இலங்கை

160. **உலகில் மிகப்பெரிய விலங்கு எது?** திமிங்கிலம்




தொல்காப்பிய மன்றம் – கனடா

# தமிழ்த்திறன் போட்டி
## பிரிவு 5
## 2011இல் பிறந்தோர்

Web: www.tolkappiyam.ca
Email: tolcanada@gmail.com
Tolkappiyam-Canada


நவீன வடிவமைப்புடன் அனைத்து விதமான
இணையத்தள தேவைகளுக்கும்
RouterSale.com
விற்பனைக்கு பிறகுமான சேவை
தேர்ச்சி பெற்ற வடிவமைப்பாளர்கள்
Mobile Friendly
Until You satisfied unlimited free updates
We Train You to Do the Updates on your site by yourSelf.
Standard SEO service included
647-891-7253
email us info@routersale.com


FREE STAGING
FREE HOME EVALUATION
FLEXIBLE COMMISSION
Your popular neighbourhood realtor
HOMELIFE/FUTURE REALTY INC. BROKERAGE.,
Independently Owned and Operated
RAJKUMAR
RASIAH
Sales Representative
MULTIPLE LISTING SERVICE
Dir : 416-707-1674
Off: 905-201-9977
Fax: 905-201-9229
r_rasiah@hotmail.com
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
www.rajkumarhomes.ca